RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1931

OPEN ACCESS

# கலைஞர் படைப்புகளில் பெண்ணிய அறம்

**பா. பாண்டியராஜன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (தன்னாட்சி), பொன்னேரி-601204, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Virtue in M. Karunanidhi’s Works

**B. Pandiarajan [a, *]**

[a] Department of Tamil, Loganatha Narayanaswami Arts and Sciences College (Autonomous), Ponneri-601204, Tamil Nadu, India

* Corresponding Author: pandi24153@gmail.com

Received: 29-08-2022
Revised: 28-09-2022
Accepted: 14-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Virtue means the worldly life, godliness and morals which leads people to good morals. From ancient times till today, people have highlighted about worshiping God and giving material things to others. Wherever there is a human life there must be a kind of moral feeling. Therefore, human virtue is related to human beings, many things are necessary for a human being to live alone in the society. Tamil literature tells us how to earn these things in a good way. Now-a-days the field of Tamil literature is creative. Writers of Tamil literature writes their work with the theme of social change and it helps the reader to attain some kind of moral behaviour too. Theories like modernism, postmodernism, Dalitism, feminism are strengthening the relationship between society and literature. Women writers have started to emerge in contemporary Tamil literature focusing on women's liberation. M. Karunanidhi has shown the virtues of women characters in his works with the concern that women should improve their lives with this vision.

**Keywords:** Feminist Theories of Constructing the Artist, Artist, Virtue, Society, Women, Home

## முன்னுரை

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ஜூன் 3 இல் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் தமது தொடக்கக் கல்வியை திருக்குவளையில் கற்றார். மேலும் தனது உயர்நிலைப் படிப்பை திருவாரூரிலிருந்த நாட்டாண்மை கழகம் பள்ளியில் சி. இலக்குவனாரிடம் தமிழ் பயின்றார். இவர் பயின்ற காலத்திலேயே நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு பல்வேறு படைப்புகளைப் படைத்தளித்தார். இவர் இளமைப் பருவத்திலேயே வட்டார மாணவர்களின் உதவியுடன் திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் எனும் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை 1944 இல் ஜூலை 7 ஆம் நாள் உருவாக்கி தம் அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்தார். இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு உதவியது. இந்த அமைப்பு கலைஞர் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து உதவியது எனலாம்.

இந்த அமைப்பின் வழியாக மாணவ நேசன் எனும் கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டு இளைஞர்களைத் திரட்டினார். பின்பு அனைத்து மாணவர்களின் கழகம் என மாற்றப்பட்டு பல சமூகப்

பணியில் இளைஞர்களை ஈடுபடுத்தினார். முரசொலி இதழை 1942 தொடங்கி 1946 முதல் 1948 மாத இதழாகக் கலைஞர் நடத்தினார். பின் சில தினங்களுக்குப் பிறகு 1953 இல் சென்னையில் தொடங்கி 1960 அதனை நாளிதழாக மாற்றி கலைஞரின் கைபட்ட கனலாக நாளிதழ் வலம் வரத் தொடங்கி இன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் அலங்கரிக்கப்பட்டு தொண்டர்களின் புத்துணர்வு பெற்று இயங்கி வருகிறது.

இது முரசொலி இதழ்களிலும் தான் படைக்கும் அத்தனை இலக்கியங்களிலும் பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டவர்கள் பெரியாருக்குப் பின் மிகப் பெரும் இடத்தைப் பெறுபவராக கலைஞர் இருந்து வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைப் பிரச்சனைகளை எல்லாம் தனது ஆட்சித் திறத்தால் சட்டமாக்கி பெண்ணியத்தின் அறம் பெருமைபடக் காத்தவர் கலைஞர். மூட நம்பிக்கைகளிலும் மூடப் பழக்க வழக்கங்களிலும் தத்தளித்து தவித்துக்கொண்டிருந்த தமிழகத்தை தம் உரத்த சிந்தனையால் எழுப்பியவர் பெரியார். உலகத்தில் சரி பாதியான பெண்களின் வாழ்வில் தன் பகுத்தறிவுச் சிந்தனையால் பெண்ணிய விடுதலைக்கு வித்திட்ட பெரியார் என்றால் அத்தகைய விந்தையை மரமாக்கி அதைப் பூத்துக்குலுங்கச் செய்தவர் கலைஞர் ஆவார்.

பெரியாரும் கலைஞரும் உடலால் வேறு வேறாக இருந்தாலும் சிந்தனையால் ஒன்றுபட்டவர்கள் எனலாம். எனவே பெரியாரையும் கலைஞரையும் பிரித்துப் பார்க்க முடியாது பகுத்தறிவுக் கொள்கையில் மட்டுமல்ல பெண் விடுதலையையும் பெரியாரின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு பெரியாரின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தவர் கலைஞர். பெரியாரின் பெயர் இந்த பூமியில் உள்ளவரை கலைஞரின் பெயரும் நிலைத்து நிற்கும் என்று சொன்னால் மிகையாகாது. கலைஞர் இலக்கியப் படைப்பாக இருந்தாலும் இயக்க உரையாக இருந்தாலும் பெண்ணிய நோக்கத்தின் தாக்கம் இல்லாமல் இருந்ததில்லை. பெண்கள் தங்களுக்கான விடுதலைத் தடைகள் இல்லாமல் பெறவேண்டும். பெரியாரின் கொள்கையை கலைஞர் செயலாக்கிக் காட்டினார் பெண்களுக்கு உண்மையான விடுதலையைத் தேடித்தரும் இயக்கமாக திராவிட இயக்கத்தை வழி நடத்தினார் (Karunanidhi, 1957).

அறிஞர் அண்ணா அவர்கள் 1956இல் பெத்தநாயக்கன் பேட்டை மகளிர் மன்றத் தொடக்க விழாவில் பெண்கள் பகுத்தறிவு பெற்று வீறுகொண்டு எழுந்து விடுதலை உணர்வு கொண்ட வீராங்கனைகளாக மாறுவார்கள் ஆனால் அது நமக்கு இன்பம் தரும் என்று பேசியதே கலைஞர் தம் இயக்கத்தின் மூலமாகவும் தமிழ் இலக்கியங்கள் மூலமாகவும் பெண்களை வீரம் கொண்ட வீராங்கனைகள் ஆக மாற்றி பெண் விடுதலைக்காகப் பாடுபட்டு வந்திருப்பது மிகையாகாது.

A women's place is every. -- Where. என்ற பெண்ணிய முழக்கத்திற்கு ஏற்ப திராவிட இயக்கத்தின் மகளிர் அணி தனியாக உருவாக்கப்பட்டது. கலைஞரைத் தொடர்ந்து அவரின் வழிவந்த தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டில் அரசுப் பணிகளில் பெண்களுக்கு ஏற்கனவே 30 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை ஒதுக்கித் தரவேண்டும் என்று செப்டம்பர் 13 2021 ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில் பேசிய நிதி மற்றும் மனித மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அரசுப் பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 40 சதவீதமாக உயர்த்தப்படும் என்று ஸ்டாலின் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை அறிவித்தார். இப்படித் தொடர்ந்து பெண்மையைப் போற்றும் இயக்கமாக திராவிட இயக்கம் இருந்துவருகிறது. ஆணும் பெண்ணும் சமம் அதனால் ஆட்சியிலும் அதிகாரத்திலும் பெண்களுக்கு சம உரிமை கொடுக்க வேண்டும் என்று உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வேண்டும் எனப் போராடியவர் கலைஞர். இறுதியாக 33% இடத்தைப் பெற்றுத் தந்தார். வைதீகத் திருமணங்களை சுயமரியாதைத் திருமணமாக மாற்றி பெண்மைக்குப் பெருமை சேர்த்தார். ஆணுக்கு நிகராக சொத்துரிமையில் சமபங்கு பெண்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தினார்.

"கண்ணுக்குள் பாவை போல்

உருண்டு இருக்கும் உள்ளம் - கையில் பெண்ணுக்கு

இருப்பதை உணர்ந்திடுவாய்”

என்று கூறியவர் ஆணைப் போலவே பெண்ணுக்கும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை உண்டு என்று செயல்திட்டம் வகுத்தவர் (Karunanidhi, 2013).

“நீ ஒரு ஆணுக்கு கல்வி கொடுத்தால்

அவனுக்கு மட்டுமே கல்வி கொடுக்கிறாய்

நீ ஒரு பெண்ணுக்கு கல்வி கொடுத்தால்

ஒரு தலைமுறைக்கு கல்வி கொடுக்கிறாய்”

என்ற பெண்ணிய அற முழக்கத்தைக் கூறியவர் கலைஞர். பெரியாரின் பாசறையில் வளர்ந்த கலைஞருக்கு தெரியும். ஒரு பெண் படித்தால் ஒரு சமூகமே கல்வி பெறும் என்பதை உணர்ந்து செயல்பட்டு பல திட்டங்களைத் தீட்டினார். ஐந்தாம் வகுப்பு வரை பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். காவல்துறையில் 1973இல் மகளிரை நியமனம் செய்ய ஆணையிட்டார் ஆறுமாதங்களுக்கு மகப்பேறு கால உதவியாக மாதம் 1000 ரூபாய் வீதம் ரூபாய் 6 ஆயிரம் உதவித்தொகை வழங்கினார். பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி பெண்களுக்குப் பெருமை சேர்த்த கலைஞர் அவர்கள் தாம் இயற்றிய அனைத்து படைப்புகளிலும் பெண்மையைப் போற்றியுள்ளார். கலைஞரின் இலக்கியத் தளங்களில் சிறுகதை, கவிதை இவற்றைக் கொண்டு கலைஞர் பெண்ணியத்தில் அறக்கோட்பாடு காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும் (Karunanidhi, 2013).

## கலைஞர் கவிதையில் பெண்ணிய அறம்

முத்தமிழுக்குள் மூழ்கி முத்தெடுத்த மூதறிஞர் கலைஞர் சங்க இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவர் சங்கத்தமிழ் நூல்களில் அவர் தணியாத காதல் கொண்டிருப்பதால்தான் சங்கத் தமிழைப் படிக்க முடிந்தது. மேலும் இன்றைய இளைய தலைமுறையினரும் புரிந்து கொள்ளும் விதத்தில் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் எழுதிய பாடலை புறநானூற்றுத் தாய் எனும் தலைப்பில் கவிதையாகத் தந்துள்ளார். காதலையும் வீரத்தையும் தம்மிரு கண்களாகப் போற்றிப் புகழ்பட வாழ்ந்தவன் தமிழன். தாய்வழிச் சமூகமாக வாழ்ந்த தமிழ்ச் சமூகம் அறிவியிலும் ஆற்றலிலும் திறம்படத் திறந்திருந்ததைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பல பெண்பாற்புலவர்கள் வீரம் செறிந்த பாடல்களையும் படைத்திருக்கிறார்கள் அந்த பாடல்களில் சிலவற்றை தமிழ்ப் புதுக்கவிதைகளாக மாற்றி படிப்போர் நெஞ்சில் பதிய வைத்துள்ளனர் (Karunanidhi, 2013).

“நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்

முளரி மருங்கின் முதியோள் சிறுவன்

பயந்து மாறினான் என்று பலர் கூற

மண்ட மக்கு உடைந்த ஆணையின் உண்ட என்

அ விடுவேன் என சினை

கொண்ட வாளோடு படு பிணம் பெயரா

சிங்களம் நுழைவு வேல் சிதைந்து வேறு ஆகிய

படு மகன் கிடக்கை காணூஉ.

ஈன்ற ஞான்றினும் பெரிது மொத்தனாலே

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்”

பாடிய பாடலின் கருத்தை எடுத்துக்கொண்டு இன்றைய இளைஞர்களையும் பெண்களையும் கவரும் வகையில் கிட்டத்தட்ட 70 வரிகளைக் கொண்ட கவிதை நூலைப் படைத்துள்ளார். அதற்கு புறநானூற்றுத் தாய் என்று தலைப்பிட்டு உள்ளார் (Karunanidhi, 2013).

“குடிசைதான் ஒரு புறத்தில்

கூரிய வேல்வாள்

வரிசையாய் அமைந்திருக்கும்

மகன் பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு

எல்லை உண்டு- அவன்

இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!

இதைக் கண்டாள் - இதயங் குளிர்ந்தாள்!

எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை

என் மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்

அறுத்தெறிய இருந்தேன்

அவன் குடித்த மார்பை - அடடா!

கருத்தறிய பொய் சொன்ன கயவனெங்கே?

வாளிங்கே! அவன் நாக்கெங்கே?"

என்ற கலைஞரின் வரியில் புறநானூற்றில் இல்லாத வீரத்தின் புதுமைகள் பொதிந்து இருப்பதைக் காணலாம். மிக்க முதுமை எய்தியிருந்தாலும் தமிழ்ப் பெண்களுக்கு உள்ள வீரத்தை புறநானூறு காட்டியதை விடப் பன்மடங்கு வீரம் அடைந்தவளாக காட்டியிருக்கிறார். மகன் இறந்தான் என்பதற்காகக் கலங்கி நிற்கவில்லை. புறமுதுகிட்டு மடிந்தான் தமிழ்மாறன் என்று கேட்டதும் அச்சொல் தனது மறக்குடி மாண்புக்கு இழுக்கு என்று எண்ணினாள் கண்களில் கனல் பொங்க விரைந்து வீரப் பெண்ணாகக் காட்டியிருப்பது கலைஞரின் தனித்திறம் (Karunanidhi, 2004).

மகன் ஈட்டிக்கு மார்பு காட்டி இறந்ததைக் கண்ட அத்தாய் அளவில்லாத மகிழ்ச்சியடைகிறாள். முகத்திலும் மார்பிலும் விழுப்புண் இருப்பதைக் கண்டு அவள் மேனி மெய்சிலிர்த்தது. அவள் உள்ளத்தில் நிலவிய வெம்மை நீங்கிற்று குடிப் பெருமையை நிறுவினான் என்ற உவகை அவள் உள்ளத்தில் மிகுந்தது என்று தமிழச்சியின் வீரத்தை ஆண்களின் வீரத்திற்கும் மேலாகக் காட்டியிருப்பதை கலைஞரின் பெண்ணிய அறம் காட்டுகிறது. வீரத்தாய் எனும் தம் கவிதையின் மூலம் மறக்குடி தமிழச்சியின் வீரத்தை மட்டும் எடுத்துக் காட்டப்படவில்லை.

"இமய வரம்பினில் வீரம் சிரிக்கும்

இங்கு வீணை நரம்பினை இசை துடிக்கும்

அதுவும் மானம் மானம் என்றே ஒலிக்கும்"

என்று மறக்குடி தமிழச்சியின் மானத்தை எடுத்துக்காட்டி சமூக வளர்ச்சிக்கும் நாட்டு வளர்ச்சிக்கும் பெண்மையை அறத்தோடுப் போற்றி இருக்கிறார் (Karunanidhi, 2004).

“ஏடா மரத்தடியிலேயே மாசு தூண்டிவிட்டாய்

மார்பு கொடுத்தேன் மகனாய் வளர்த்தேன்

தின்று கொழுத்து திமிர் பாய்ந்த தோள்கள் எங்கே

தினவெடுத்த வில்லையே அன்பே”

என்று அலறித் துடிக்கிறாள். மகனின் சாவுக்கு அஞ்சாத வீரத்தோடு சாகவில்லையே என்று மறத்தமிழ்க் குடிக்கும் இழுக்கு ஏற்படுத்தி விட்டான் என்று அலறித் துடிக்கிறாள் தன் மகன் கோழை என்று தெரிந்தால் இந்தச் சமூகம் தன்னை இழித்துப் பேசுமே கோழைக்கு பால் கொடுத்த மூதேவியே என்று எனக்கு அவச்சொல்லை ஏற்படுத்தி விட்டானே என்று கலங்கும் பெண்ணியத்தைக் காட்டுகிறார் கலைஞர் (Karunanidhi, 2004). இதுபோன்று புறநானூற்றுத் தாய் 2 என்னும் கவிதை புறநானூற்றில் 279 என்னும் பாடலைக் கொண்டு பெண்களே வாளெடுத்துப் போர் புரியத் தூண்டும் கவிதையாக வடித்துள்ளார். முதல் நாள் போரிலே தந்தை இழந்தாள் மறுநாள் போரில் கணவனை இழந்தாள் மீண்டும் போர்ப்பறை கேட்கிறது அது அவளின் காதில் இனிமை ஏற்படச் செய்கிறது, ஆனாலும் நம் வீட்டில் போர் புரிய ஆள் இல்லையே என்று வருத்தப்படுகிறாள் பள்ளிக்குச் சென்றச் சிறுவனை அழைத்து வந்து அவனுக்குத் தலை சீவி தலைப்பாகை அணிவித்து வேலைக் கையில் கொடுத்து போய்வா மகனே போருக்கு என்று அனுப்பி வைக்கிறாள் என்றால் பெண்ணின் அறப் பண்பு தமிழ் மரபில் எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## கலைஞர் நாடகம் வெளிப்படுத்தும் பெண்ணிய அறம்

அபிநய சுந்தர் ஆதிக்க வெறியர் இவருடைய பக்தி மயமான தோற்றத்தைக் கண்டு வாழ்விழந்த பெண்கள் பலர், இவர்களால் ஏமாற்றப்பட்டவர்களைப் பற்றி ஒரு பட்டியல் போட முடியும். அபிநய சுந்தரின் ஆணவத்தால் மனைவி மக்களை இழந்த கங்காதரன் அவர் மகளைக் கவர்ந்து சென்று போர்ப் பயிற்சி அளிக்கிறான். அவருடைய மகளாலேயே துப்பாக்கியால் சுட்டு அவர் இறக்கும் நிலையை உருவாகின்றன. சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்கின்ற பாதைகளை அறிந்து அதனை அழிப்பதற்காக ஒரு பெண்ணின் உதவி அவனுக்குத் தேவைப்படுவதாக உள்ளது என கலைஞர் உணர்த்தியுள்ளார்.

வேணியின் தந்தை சமயோசிதம் பிள்ளையும் அநீதிக்குத் துணை போனவர் சாதி வெறியால் ஏற்பட்ட குழப்பத்தில் கல்லூரி விடுதி மாணவர்கள் போராட்டத்திற்கு தலைமை ஏற்றுப் பாண்டியனைக் கொல்லும் சதியில் அபிநய சுந்தருக்கு உடந்தையாக உள்ளார் இதனை அறிந்த அவர் மகள் வேணி தவறு செய்தது தந்தையானாலும் அவரையும் காட்டிக்கொடுக்கும் அற உணர்வோடு துடிக்கின்றாள். கட்டிய மனைவியின் மீது அபாண்டமாக பழி சுமத்தி அவளைக் கொன்றுவிட்டு அபிநயசுந்தர் மறைந்து விடுகின்ற பொழுது அதை எதிர்த்து கல்லூரி மாணவர்கள் நடத்திய கண்டன ஊர்வலத்தில் வேணி மாணவிகள் அணிக்கு தலைமை தாங்கி நடத்திச் செல்கின்றார். பின்பு தந்தையின் மீது கோபம் கொண்ட வேணி தந்தையிடம் கீழ்க்கண்டவாறு வாதிடுகின்றாள்.

“சமயோசிதம்

நீயும் சேர்ந்து இந்த பசங்களோடு

கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம் பொதுக்கூட்டம்

எல்லாம் நடத்தி அபிநய சுந்தருக்கு எவ்வளவு

பெரிய ஆபத்தை கொண்டு வந்து விட்டாய்

தாய்குலத்தை கழுத்தை நெரித்து கொலை செய்வது

அதை தற்கொலை என்று சாதிப்பது

எப்படியப்பா பொறுத்துக் கொள்ளும்”

சமயோசிதம் வேணி இவர்களின் உரையாடல் மூலம் பெண்கள் அற உணர்வோடு அநீதியைத் தட்டிக் கேட்கத் தயங்கக் கூடாது என்றும் இத்தகைய உணர்வு மாணவப் பருவத்திலேயே எழுவதுதான் சிறப்பு என்றும் கூறுகின்றார். கலைஞர் நிகழ்கால மாணவர்கள் தாம் எதிர்காலத்தில் சிறந்த சீர்திருத்தவாதிகளாகத் திகழ முடியும் என்பது கலைஞரின் எண்ணம். இதனைத் தம்முடைய நாடகப் படைப்பான தூக்கு மேடையில் பெண்களின் அறச்செயல்களை அப்படியே படம் பிடித்துக்காட்டி இருப்பது மிகையாகாது (Karunanidhi, 1957).

## கலைஞர் சிறுகதையில் பெண்ணிய அறம்

சாரப்பள்ளம் சாமுண்டி என்ற சிறுகதையில் மனித நேயம் காட்டும் அன்பு, இரக்கம், கருணை, சமூகப் பற்று, ஒழுக்கம் இவை அனைத்தும் மனித வாழ்வினைப் போற்றும் ஒருவன் எந்நேரத்திலும் தன்னுடைய மனிதநேயத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை கலைஞர் புலப்படுத்துகிறார்.

சிற்பி இனியன் சிலைகள் செதுக்குபவன். இந்நிலையில் இராசேந்திர சோழனின் மனைவி பஞ்சவன் மாதேவி சாமுண்டி என்ற மாற்றுப் பெயருடன் அபிநயம் பிடித்துக் காட்டியபடி கலைத் தொண்டுக்குத் துணை புரிகின்றாள். அரசன் மனைவி என்று சிற்பிக்குத் தெரியாது அந்நிலையில் சிற்பி தன்னுடைய பணியைச் சிறப்பான முறையில் செய்து வருகிறான். எதிர்பாராத விதமாக அவளின் அழகில் மயங்கி இனியன் அவளை அடையும் ஆவல் கொண்டான்.

“தங்க மேனி

தாமரை முகம்

நீல குரு நயம்

கோலச் செவ்வாய்

வில் போல் புருவம்

விரும்பிய மார்பகம்

ஆலிலை வயிறு”

இத்தனை அழகையும் சிற்பி இனியன் தன்னுடையப் பார்வையால் அள்ளி எடுத்து விட்டான். ஒருநாள் சிலை செதுக்கும் நிலையில் அவன் கண்ணில் செதில் விழுந்தபோது அதை எடுத்து அவனைக் காப்பாற்றச் சென்றாள் சாமுண்டி. அந்நிலையில் அவன் அவளைக் கட்டித் தழுவினான். அப்போது அப்பெண் தன்னுடைய வலியையும் பொருட்படுத்தாமல் அவனை இழுத்து தள்ளி விட்டு ஓடி தன்னைக் காத்துக் கொண்டாள். பெண்ணானவள் எந்நிலையிலும் தன்னுடைய ஒழுக்கத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஒழுக்கம் தவறாமையும் பெண்களின் சிறப்பியல்புகளையும் கற்புநெறி தவறாத அறத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறார் (Karunanidhi, 2013).

## பற்றுள்ளம்

பிச்சைக்காரியாக இருந்தாலும் தன்னுடைய பிள்ளையை நல்ல நிலையில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் தாயே தன் பிள்ளைக்காகப் படும் கஷ்டத்தையும் பிள்ளை தான் தாயைப் எண்ணி கவலைப்படும் நிலையையும் அபாக்கிய சிந்தாமணி என்னும் சிறுகதையின் மூலம் பற்றுள்ளம் கொண்டமையைக் காட்டுகிறார்.

“பிச்சைக்காரர் பெண்ணுக்கு

தாய் பாசம் இருக்காதா என்ன?

பிச்சைக்கார தாயாருக்கும் தான்

மகளின் எதிர்காலத்தை பற்றி

ஏக்கம் இருக்காமல் இருக்க முடியுமா?”

என கலைஞர் தம் சிறுகதை மூலம் சமூகத்தில் நடக்கக்கூடிய மனிதநேயத்தை பெண் பாத்திரப்படைப்பபின் மூலம் அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் (Karunanidhi, 2013).

## முடிவுரை

"வலியன வாழும்" என்பது உலகத்தின் பொது நீதி என்பார் அதாவது மெலியனவற்றை வீழ்த்தி அதன்பயன் கொண்டு வலியன வாழும் என்பதையே வாழ்வியல் தத்துவமாக மாந்தர் இனம் நம்புகிறது. ஆனால் தமிழினம் இதனை ஏற்பதில்லை பெரியோர் என்பாரும் சிறியோர் என்பாரும் ஓர் நிறை எனக் கருதும் பண்பினை உடையது தமிழினம். எனவேதான் பேத உணர்வுகள் தலைதூக்காத சமநிலை வாழ்வியலுக்கானக் கருத்துகளைத் தமிழ் இலக்கியங்கள் பழங்காலந் தொட்டே கூறிவருகின்றன. இருப்பினும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதமில்லை, வலியர் மெலியர் என்ற பேதம் இல்லை, ஆண் பெண் என்ற பேதமும் இல்லை. அப்பழங்காலத்தில் பல்வேறு மக்கள் இனக்குழுக்களில் ஆண்-பெண் பேதம் தலைவிரித்தாடியது. இத்தகு இழிவுகளையும் பழிகளையும் அவ்வக் கால இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவ்வாறு காலந்தோறும் படைக்கப்பட்ட இலக்கியங்கள் அவ்வக் காலத் தமிழரின் வாழ்வியலைக் காட்டுவதுபோலத் தற்கால இலக்கியங்களிலும் தமிழினத்தின் தற்கால வாழ்வியலைச் சிறப்புடன் பதிவு செய்து வருகின்றன. அத்தகைய நிலையில் நிகழ்காலத்தில் கலைஞர் தம் படைப்புகளில் இதுபோன்ற பெண்ணிய அறக் கோட்பாடுகளைச் சங்க இலக்கியம், சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், மேடைப்பேச்சு, சினிமா போன்ற அத்துனைத் தளங்களிலும் கையாண்டுள்ளார். பெண் கல்வியே பெண்ணடிமையில் இருந்து விடுதலை பெற உதவும் ஆயுதம். ஆண்களுக்கு இணையாக பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்றும் அக்கல்வி பெண்களை எப்படி அறவழியில் சிந்திக்கவைக்கும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் பெண்ணியத்தைப் போற்றிப் புகழ் பெற வேண்டும் என்று பல நலத்திட்ட உதவிகளையும் அரசியல் சட்டங்களையும் இயற்றினார். பெண்மையை தம்முடைய இலக்கிய படைப்புகளில் இயற்றிப் போற்றியுள்ளார் என்பதை காட்டுவதற்காக கலைஞர் படைப்புகளில் பெண்ணிய அறம் என்னும் தலைப்பு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## References


Avvai Duraisamipillai, (2009) Puranaanuru, Poonbugar Pathippagam, Chennai, India.

Karunanidhi, (1957) Thokku Medai, Bharathi Pathippagam, Chennai, India.

Karunanidhi, M. (2013) Kalaijerin Sirukathai Ponga, Seethai Pathippagam, Chennai, India.

Ramki, (2022) Oru Virivana Vazhkai Varalaru, Kizzhakku Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License